Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 4, 2022

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 04, 2022 | ஒளி: 08 கதிர்: 113 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## புதனன்று லிட்ரோ விலை குறையும்




எரிவாயு விலைச் சூத்திரத்துக்கமைய லிட்ரோ எரிவாயு விலைகள் மாதாந்தம் திருத்தப்படுகின்ற நிலையில், எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை எரிவாயு விலைகள் குறைக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், நேற்று (03) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

புனர்வாழ்வு பணியக சட்டமூலம்:

# திருத்தங்களை செய்ய அரசாங்கம் உத்தேசம்



### நீதித்துறை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்கிறார் சட்டமா அதிபர்

புனர்வாழ்வுப் பணியக சட்டமூலம் குறித்த ஏற்பாடுகள், நீதித்துறை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்று உயர்நீதிமன்றத்துக்கு நேற்று (03) அறிவித்த சட்டமா அதிபர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் சில திருத்தங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்றும் அறிவித்தார்.

நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, கடந்த 23 ஆம் திகதி புனர்வாழ்வு பணியகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

அந்தச் சட்டமூலம் நாட்டை இராணுவமயப்படுத்துவதற்கு வழிவகுக்கும்; அரசியலமைப்புக்கு முரணான சட்டமூலம் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி சட்டத்தரணி அமில எகொடமஹவத்த உயர் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (29) விசேட தீர்மான மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ச்சி P2

# ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்பு

### சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரிக்கப்படும்

பா.நிரோஸ்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக்கூற வேண்டும் என சபையில் தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், சர்வதேச ஒத்துழைப்புகளைப் பெற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பர் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தீர்மானம் நியாயமற்றது

### தோற்றாலும் நிலைப்பாட்டில் மாற்றமில்லை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்டு உள்ள புதிய தீர்மானமானது, நாட்டின் இறையாண்மைக்கும், அரசியலமைப்பிற்கும் முரணானது. ஆகவே இந்தப் பிரேரணையுடன் நாம் உடன்படப்போவதில்லை என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தமிழ் மிரருக்கு தெரிவித்தார். இந்தத் தீர்மானத்தில் நாம் தோல்வியுற்றாலும் கூட, எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத பல்வேறு காரணிகள் இந்தத் தீர்மானத்தில் உள்ளது. அத்துடன் இது நியாயமற்ற தீர்மானம் என்றே கருதுகிறோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கனடிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியை சந்தித்தார்



இலங்கையில் தமது பதவிக் காலம் முடிந்து நாடு திரும்பவுள்ள கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினொன் மற்றும் பிரான்ஸ் தூதுவர் எரிக் லவே(ர்)து ஆகியோர் நேற்று (03) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தனர்.

தொடர்ச்சி P2

## கொள்ளையை தடுத்த சார்ஜனுக்கு பதவியுயர்வு

தம்புத்தேகமவில் வங்கிக் கொள்ளையர்கள் இருவரைக் கைது செய்த பொலிஸ் சார்ஜன்ட் பி.ஏ புத்திக குமார, உப பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம், நேற்று (03) அறிவித்தது.

தம்புத்தேகமவிலுள்ள தனியார் வங்கியொன்றில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதியை வைப்பிலிடுவதற்காக பொருளாதார வர்த்தக மத்திய நிலையத்தைச் சேர்ந்த வர்த்தகர் கடந்த 26ஆம் திகதி வங்கிக்குச் சென்று கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2



ரூ. 532 கோடி வரி ஏய்ப்பு

## அர்ஜுன் அலோசியஸ் பிணையில் விடுவிப்பு

532 கோடி ரூபாய் வருமான வரியை செலுத்தாமல் வரி ஏய்ப்பு செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸை 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரி. என். இலங்கசிங்க, நேற்று (03) கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P2

## சேரி இல்லாத நாட்டை உருவாக்குவோம்

### பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

சேரி வீட்டுத்திட்டம் இல்லாத நாட்டை உருவாக்கி குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாப்பதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். போராட்டம் என்பது நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக இருக்க வேண்டுமே தவிர, நாட்டை வீழ்த்துவதற்காக அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பொருளாதார நெருக்கடி விவகாரம்:

## உயர்நீதிமன்றின் தீர்மானம் ஒக். 7இல் அறிவிக்கப்படும்

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதா, இல்லையா என்பது குறித்த தீர்மானம், ஒக்டோபர் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று உயர்நீதிமன்றம், நேற்று (03) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2



இலங்கையின் முன்னேற்றம் குறித்து மதிப்பீட்டு அறிக்கை

## வருட இறுதியில் அல்லது 2023 ஆரம்பத்தில் வெளிவரும்

### ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவிப்பு

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டிருக்கும் மதிப்பீட்டு அறிக்கை இவ்வருட இறுதியில் அல்லது 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்படுமென ஐரோப்பிய ஆணைக்குழு அறிவித்துள்ளது. அத்துடன், இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நீடித்து நிலைக்கும் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கத் தேவையான மறுசீரமைப்புகளை ஏற்படுத்தவும்,

தொடர்ச்சி P2




## உறுதிப்பத்திரத்தை வழங்கு

1987ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்ட 37,000 பெருந்தோட்ட வீடுகளுக்கு சட்டரீதியான உறுதிப்பத்திரத்தை வழங்குமாறு கோரி மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தினரால் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நேற்று (03) முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

மலையகத்தில்

## மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்சரிவு அபாயத்தில்

மஹேஸ்வரி விஜயனந்தன்

மலையகத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்சரிவு அபாயத்தில் இருப்பதாக பாராளுமன்றத்தில் முன்கூட்டியே கூறியிருந்தோம் என தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்,

தொடர்ச்சி P2

2023 இல் மாணவர்களுக்கு

# இந்திய உதவியில் புத்தகம்; சீன உதவியில் சீருடை

பா.நிரோஸ்

2023ஆம் ஆண்டுக்காக மாணவர்களுக்கு தேவையான 39.5 மில்லியன் பாடப்புத்தகங்கள், இந்திய உதவியுடன் இன்னும் குறுகிய காலத்துக்குள் அச்சிடப்பட்டு, துரிதமாக விநியோகிக்கப்படும் எனவும், அதேபோல் சீன உதவியுடன் ஜனவரி மாதம் சீருடை விநியோகமும் இடம்பெறுமெனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று (3) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது எதிர்க்கட்சி எம். பி. மிலான் ஜயதிலக்க முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2



## ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சையா?

### பிரதம நீதியரசரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது என்கிறார் நீதி அமைச்சர்

பா.நிரோஸ்

சட்டக்கல்லூரி மாணவர்கள் 2023ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆங்கில மொழியில் மட்டுமே பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என வெளியிட்டுள்ள வர்த்தமானியை மீள்பரிசீலனை செய்ய பிரதம நீதியரசரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதால் தமிழ், சிங்கள மாணவர்களின் அடிப்படை உரிமைக்கு பாதிப்பு ஏற்படாதென நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நகர ஏழைகள், தோட்ட தொழிலாளர் போல

## பெண் தலைமைத்துவ குடும்பங்களும் பாதிப்பு

### அதிகூடிய பணவீக்கம், எரிபொருள் தட்டுப்பாடே அச்சுறுத்தல்

ஆசியாவின் அதிகூடிய பணவீக்க விகிதம் மற்றும் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவை, இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவித்த உலக உணவுத் திட்டம், நகர்ப்புற ஏழைகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களைப் போலவே பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## புதனன்று லிட்ரோ விலை குறையும்

கடந்த மாதத்துக்கான விலைத்திருத்தம் செப்டெம்பர் 5ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதற்கமைய 2.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 113 ரூபாயாலும் 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 45 ரூபாயாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 21 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருந்தன.

புதிய விலைக் குறைப்புக்கு அமைய, 4,664 ரூபாயாக இருந்த 12.5 கிலோ கிலோகிராம் சிலிண்டரின் விலை 4,551 ரூபாயாக குறைவடைந்தது.

1,872 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,827 ரூபாயாகவும், 869 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 848 ரூபாயாகவும் குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள், இலங்கையில் உள்ள தங்களது றவினர்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை டொலர்களில் கட்டணம் செலுத்தி முற்பதிவு செய்வதற்கான செயலியை லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை உள்ளூர் சந்தைக்கான விநியோகம் இடம்பெறாது என, நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதலுக்கு..

பாராளுமன்றத்தின் நேற்றைய (3) அமர்வில், வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற வேளையில் நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே இருந்தார். அவரே பாதுகாப்பு அமைச்சராகவும் முப்படைகளின் தளபதியாகவும் இருந்தார். எனவே இத்தாக்குதலுக்கு அவரே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்ட விதம் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஈஸ்டர் விசாரணைகளின் ஊடாக இதற்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பது தெளிவாக தெரிகிறது. மேலும் இத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் ஓரிரு எம்.பிக்களை தவிர்ந்து வேறெவரும் இதனைப் படிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

விசாரணைகளுக்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகள் பெறப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## பெண் தலைமைத்துவ...

அதிக பணவீக்கம், அதிகரித்து வரும் விலைவாசி ஏற்றம், மின் வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றால், முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை இலங்கை தொடர்ந்து அனுபவிப்பதாக உணவுத் திட்டம் குறிப்பிட்டது. சமீபத்தைய அறிக்கைக்கு அமைய இலங்கையில் 6.2 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையிலுள்ள 10இல்

## தீர்மானம் நியாயமற்றது

இம்முறை பிரேரணைக்கு எதிராக உறுப்பு நாடுகளின் ஆதரவை நாம் கேட்டு நிற்கின்றோம், எனினும் பிரேரணையை வெற்றிகொள்ளக்கூடிய ஆதரவு எமக்கு கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. கடந்த முறை எமக்கு ஆதரவு தெரிவித்த சில நாடுகள் இம்முறை உறுப்புரிமையை பெறவில்லை. மேலும் சில நாடுகள் வாக்களிப்பதில் தவிர்த்துக்கொள்ளும். எவ்வாறு இருப்பினும் சகல நாடுகளின் ஆதரவையும் நாம் கேட்டு நிற்கிறோம் எனவும் தெரிவித்தார்.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வு 2022 ஒக்டோபர் 07ஆந் திகதி நிறைவடையவுள்ளது. ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, மலாவி, மொண்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பிலான (A/HRC/51/L.1) என்ற வரைவுத் தீர்மானத்திற்கு 2022 அக்டோபர் 06ஆந் திகதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், சபையின் 51வது கூட்டத்தொடரின் இறுதிப் பகுதிக்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி ஜெனீவாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். அவருடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளும் இணையவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கனேடிய உயர்ஸ்தானிகர்

இச்சந்திப்பின்போது தமது பதவிக் காலம் முடிவடைந்துள்ளமை தொடர்பில் அவர்கள் ஜனாதிபதிக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவித்தனர். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, கனேடிய உயர்ஸ்தானிகர் மற்றும் பிரான்ஸ் தூதுவர் ஆகியோருடன் நல்லெண்ணம் அடிப்படையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

## கொள்ளையை தடுத்த சார்ஜனுக்கு பதவியுயர்வு

அவரிடம் ஆயுதத்தைக் காட்டி குறித்த பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிக்க முயன்றபோது, அவர்களை தடுத்து, கடும் போராட்டத்தின் பின்னர் இருவரையும் குறித்த சார்ஜன் கைது செய்திருந்தார். கொள்ளையர்களுடன் போராடிய சந்தர்ப்பத்தில், சார்ஜனை நோக்கி சுட்டபோது துப்பாக்கி வெடிக்கவில்லை என்பதுடன், அவர் மீது கொள்ளையர்கள் நடத்திய மிளகாய்ப் பொடி தாக்குதலிலும் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர்களிடமிருந்த துப்பாக்கி மற்றும் கத்தி ஆகியவற்றையும் அவர் மீட்டிருந்த நிலையிலேயே அவருக்கு பதவியுயர்வு வழங்க்கபட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் குறித்த வங்கிக் கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றியிருந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்தது.

# திருத்தங்களை செய்ய அரசாங்கம் உத்தேசம்

மேலும், குறித்த சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர், எஸ்.எம்.மரிக்கார் வெள்ளிக்கிழமையன்று (30) அடிப்படை உரிமைகள் மனுவொன்றை தாக்கல் செய்தார். குறித்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபரால் மேற்குறிப்பிட்ட விடயம் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் 3 மற்றும் 4 வது பிரிவுகளை குறித்த சட்டமூலம் மீறும் என்றும் நாட்டு மக்களுக்கு சொந்தமான நீதிமன்ற அதிகாரம், நீதிமன்றத்தின் உத்தரவின்றி பணியகத்திடம் ஒப்படைக்கப்படுவதாகவும், சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது நீதிமன்ற அதிகாரத்தை சூறையாடும் எனவும் சட்டத்தரணியின் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தீவிர அல்லது அழிவுகரமான செயல்களில் ஈடுபடும் வழி தவறிய போராளிகளுக்கு புனர்வாழ்வு என முன்னுரையில் கூறப்பட்டாலும், குறிப்பிட்ட வரையறை எதுவும் உள்ளடக்கப்படாமையின் காரணமாக கடந்த கால தவறுகளுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு கூட புனர்வாழ்வு அளிக்கும் அதிகாரம் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்களின் பேச்சு, கருத்துச் சுதந்திரம், அமைதியான போராட்ட சுதந்திரம் ஆகியவற்றை முற்றிலும் நசுக்கும் வகையிலான இந்த சட்டமூலத்தை சபையின் 2/3 பெரும்பான்மைக்கு மேலதிகமாக வாக்கெடுப்பின் மூலம் மக்களின் ஆணை தேவை என்று அறிவிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார். வழி தவறிய போராட்டக்காரர்கள், அடிப்படைவாதிகள், நாசகார செயலில் ஈடுபடுவோர் அல்லது போதை மருந்துகளுக்கு அடிமையானோருக்கான புனர்வாழ்வு செயற்பாட்டை திறம்பட செயலாற்றுவதற்காக இந்த பணியகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது. பணியகத்தின் செயற்பாடுகள், நிர்வாகம், முகாமைத்துவம் என்பவற்றுக்கு சபையொன்றை ஸ்தாபிக்கப்பட்டு, பாதுகாப்புக் கல்வி, சுகாதாரம், புனர்வாழ்வு உள்ளிட்ட துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள் அதற்கென நியமிக்கப்படவுள்ளனர். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் அதில் உள்ளடக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர்நீதிமன்றின் தீர்மானம் ஒக். 7இல் அறிவிக்கப்படும்

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, எல்.டி.பி. தெஹிதெனிய, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய ஐவரடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிர்வரும் 7ஆம் திகதி உத்தரவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் உட்பட சிலரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி நெருக்கடி குறித்து ஆராய குழுவை நியமிக்குமாறு கோரியும் மனுதாரர்கள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர். ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, மத்திய வங்கியின் நாணயச் சபை ஆகியோர் உட்பட 39 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## அர்ஜுன் அலோசியஸ் பிணையில் விடுவிப்பு

குறித்த வரி ஏய்ப்பு தொடர்பில், பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டட் நிறுவனத்துக்கு எதிராக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2021 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தது.

கடந்த 29ஆம் திகதி வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அலோசியஸ் நீதிமன்றத்தில் ஆஜராகாதாத நிலையில் நேற்றையதினம் (03) மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்து நீதவான் உத்தரவிட்டார். இந்நிலையில் நேற்றையதினம் மன்றில் ஆஜராகியிருந்த அலோஸியஸுக்கு மேற்குறிப்பிட்ட பிணை வழங்கப்பட்டது.

இதேவேளை, 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தில் சுமார் 688 மில்லியன் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டமைக்கு அர்ஜுன் மஹேந்திரன் பொறுப்பாக இருந்தார் என்றும் அவருக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அலோசியஸ் உள்ளிட்ட இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்குற்றங்களைப் புரிவதற்கு அர்ஜுன மஹேந்திரனுடன் இணைந்து சதி செய்தார் என்று அவருடைய மருமகனான அர்ஜுன் அலோசியஸுக்கு எதிராகவும் உடந்தையான இருந்தார் என்ற குற்றச்சாட்டில் அந்நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனவுக்கு எதிராகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்சரிவு அபாயத்தில்

இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு அனர்த்த முகாமைத்து அமைச்சின் ஊடாக தீர்வை வழங்குமாறும் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.

நேற்று (3) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

மண்சரிவு அபாய வலயத்தில் வாழாத காளியம்மா இன்று உயிரிழந்ததைப் போன்று, நாளை மண்சரிவு அபாயத்தில் உள்ள பகுதிகள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம். எனவே, இது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளதுடன், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் காணி அமைச்சர் ஹரீனுடனும் தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் தொடர்கொண்டு பேசியதாகத் தெரிவித்த அவர் இதற்கு உடனடியாக தீர்வை எடுக்க வேண்டும் என்றும் ஏனெனில் நாட்கள் செல்ல செல்ல இதன் ஆபத்து அதிகம் என்றார். அத்துடன் அமைச்சர் ரமேஸ் பத்திரணவும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருவதாகத் தெரிவித்தார்.

## ஆங்கில மொழியில்...

பாராளுமன்றம் நேற்று (3) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ கூறுகையில்,

சிங்களம் மற்றும் தமிழ் மாணவர்கள் தங்களின் தாய்மொழியில் சட்ட பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய உரிமையுண்டு, வெளிநாட்டில் ஆங்கில மொழியில் சட்ட படிப்பை பூர்த்தி செய்த ஒருவர் சட்டத் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கும், சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சட்ட தொழிற்துறையில் ஈடுபடுபவர்களுக்கும் தொழிற்துறை ரீதியில் ஒருசில சிக்கல்கள் காணப்படுகின்றன என்றார்

## வருட இறுதியில் அல்லது 2023 ஆரம்பத்தில் வெளிவரும்

தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கும் இலங்கை எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கத் தயாரெனவும் ஐரோப்பிய ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி, ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் திருமதி. எர்சூலா ஃவொன் டேயர் லைன் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“இலங்கை மக்கள் எதிர்பாரா சவால்களைச் சந்தித்துள்ளனர். இந்த நெருக்கடியிலிருந்து மீள, இலங்கை இந்தக் காலகட்டத்தில் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும். நாட்டை மீண்டும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும், நீடித்து நிலைக்கும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் தேவையான மறுசீரமைப்புகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

சட்டத்தின் ஆட்சி, கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை, அனைத்து தரப்பினருடனும் பேச்சு நடத்துதல், அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்பன இச்செயன்முறையின் மிக முக்கியமான அம்சங்களாகும்.

## சேரி இல்லாத நாட்டை உருவாக்குவோம்

உலக வாழ்விட தினத்தை முன்னிட்டு நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் வாழும் உலகில் உணவு, உறைவிடம், உடை ஆகியவை மனித வாழ்வின் உரிமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அந்த மனித உரிமையை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஒவ்வொரு நாடும் முயற்சித்து வருகிறது. தீர்வுத் திட்டம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பிரதமர் ஆர். பிரேமதாஸவின் நடவடிக்கைகளை உலகமே ஏற்றுக்கொண்டது. உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு வீடற்ற குடும்பமும் தங்கள் வீடு பற்றிய நம்பிக்கையை நிறைவேற்றும் நாளைக் கொண்டுவருவதே இதன் நோக்கமாக இருந்தது. அதற்காக பல்வேறு நாடுகளில் பல சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. எனவே, நம் நாட்டில் பெருநிறுவனங்கள், துறைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் வசதிகளைப் பெற உரிமை உண்டு. வீடுகள், வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு சுகாதாரம் மற்றும் குழந்தைகளின் கல்வி ஆகியவை இதில் அடங்கும். கொழும்பு நகரில் மட்டும் 1200 குடியிருப்புகள் முழுமையான வசதிகள் அற்றவை.

குடிசைகள் இல்லாத நகரத்தை உருவாக்கும் லட்சியத்தை நோக்கி நகரும் உறுதியான நிலைப்பாட்டுடன், குடியேற்றத் திட்டம்

இன்று அரசாங்கம் அந்த சவாலை ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்கு அனைவரின் ஆதரவையும் வேண்டுகிறோம் எனவும் தெரிவித்தார்.

## இந்திய உதவியில் புத்தகம்...

2023ஆம் ஆண்டுக்காக 39.5 மில்லியன் பாடப்புத்தகங்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 45 சதவீத பாட புத்தகங்களை இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் கடதாசி மற்றும் மூலப்பொருள் இறக்குமதி ஊடாக அரசாங்க அச்சக திணைக்களத்தின் ஊடாக அச்சிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு, அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மிகுதி 55 சதவீதமான புத்தகங்களை அச்சிடுவதற்கு தேசிய பெறுகை ஊடாக திறந்த மனுக்கோரலுக்கு விடப்பட்டுள்ளது. அதற்கமைய இன்னும் குறுகிய காலத்திற்குள் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டு, துரிதமாக விநியோகிக்கப்படும்.

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படும் என்றார்.

## உறுதிப்பத்திரத்தை வழங்கு

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தோட்டத் தொழிலாளர் இந்த நாட்டின் பிரஜைகள் என்றும், அவர்கள் சமமாக மதிக்கப்பட வேண்டும், எமது நில உரிமையை உடனடியாக பெற்று தாருங்கள், பழமையான வீட்டு வாழக்கை போதும் போன்ற எதிர்ப்பு பதாகைகளை ஏந்திய வண்ணம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

## கோப் மற்றும் கோபா உறுப்பினர்கள் நியமனம்

பாராளுமன்ற நிலையியல் கட்டளை 119 இன் ஏற்பாடுகள், கட்டளை 120 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஒகஸ்ட் 10ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றால் தடைபெறாமல், 2022 ஒகஸ்ட் 29ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக தெரிவுக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயரையும், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழுவில்) பணியாற்றுவதற்காக தெரிவுக் குழுவால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (03) அறிவித்தார்.

இதற்கமைய, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு ஜகத் புஷ்பகுமார, ஜானக வக்கும்புர, லொஹான் ரத்வத்தே, இந்திக அநுருத்த ஹேரத், டி.வீ. சானக, சாந்த பண்டார, அநுர திஸாநாயக்க, ரவூப் ஹக்கீம், பாட்டளி சம்பிக ரணவக்க, மஹிந்தானந்த அலுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, கலாநிதி ஹர்ஷ த சில்வா, இரான் விக்கிரமரத்ன, நிமல் லான்சா, எஸ்.எம். எம். முஸ்ஸாரப், நலீன் பண்டார ஜயமஹ, எஸ். எம். மரிக்கார், முஜிபுர் ரஹுமான், ரோஹினீ குமாரி விஜேரத்ன, சஞ்ஜீவ எதிரிமான்ன, ஜகத் புஷ்பகுமார, பிரேம்நாத் சி. தொலவத்த, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, சாணக்கியன் இராசமாணிக்கம், திருமதி ராஜிகா விக்கிரமசிங்ஹ, மதுர விதானகே, பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக மொஹான் பிரியதர்ஷன த சில்வா, லசந்த அழகியவன்ன, கே. காதர் மஸ்தான், கலாநிதி சுரேன் ராகவன், (திருமதி) டயனா கமகே, எஸ். பி. திஸாநாயக்க, திஸ்ஸ அத்தநாயக்க, கபிர் ஹசீம், கலாநிதி சரத் வீரசேகர, விமலவீர திஸாநாயக்க, நிரோஷன் பெரேரா, டொக்டர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே, ஜே.சீ. அலவத்துவல, அஸோக அபேசிங்ஹ, புத்திக பத்திரண, ஜயந்த சமரவீர, ஹெக்டர் அப்புஹாமி, ஹேஷா விதானகே, மேஜர் பிரதீப் உந்துகொட, இசுரு தொடன்கொட, வசந்த யாப்பா பண்டார, சாணக்கியன் இராசமாணிக்கம், எம். டப்ளியூ. டீ. சஹன் பிரதீப் விதான, டீ. வீரசிங்க, வீரசுமன வீரசிங்ஹ, பேராசிரியர் சரித்த ஹேரத், திருமதி ஹரினி அமரசூரிய ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இனிமேல் பேசப்போவதில்லை

கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என சபாநாயகரிடம் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்ததோடு, இது தொடர்பில் இனிப் பேசப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று (03) கூடிய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகளை பாராளுமன்ற சம்பிரதாயங்களின்படி, எதிர்க்கட்சிக்கு வழங்குவது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் கேள்வி எழுப்பியிருக்கிறேன். இதன்போது எதிர்க்கட்சிக்கு தலைவர் பதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகரும் உறுதியளித்திருந்தார். ஆனால், இதுவரை தலைவர் பதவிகள் எமக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும், இரு வருடங்களுக்கு முன்பு அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என நாம் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும், நிலையியல் கட்டளைகளில் திருத்தங்களை மேற்கொண்டு அதன் தலைவர் பதவியை ஆளுங்கட்சிக்கு சபாநாயகர் வழங்கினார்.

## கார்டினலை பாதுகாப்போம்



கார்டினல் மெல்கம் ரஞ்சித்துக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்பட விடமாட்டோம் எனத் தெரிவித்துள்ள அரசாங்கம், கார்டினலை பாதுகாப்போம் எனவும் சபைக்கு அறிவித்தது.

கார்டினல் மெல்கம் ரஞ்சித்திற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதா என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. இது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்த நடவடிக்கை எடுப்பேன். கார்டினலுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்பட விடமாட்டோம். கார்டினலைப் பாதுகாப்போம் எனவும் தெரிவித்தார்.

பிணைமுறி மோசடி

# ஜனாதிபதியின் தலையீடு இருக்காது



மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நீதிமன்றம் குற்றவாளியென அறிவிக்கவில்லை என சபையில் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, இது தொடர்பான விசாரணைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிடமாட்டார் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியின் வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களுக்கும் தொடர்புள்ளது. குறிப்பாக 2015 பெப்ரவரி முதலாம் திகதி முதல் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்ட பிணைமுறி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபரால் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

குறைவடையும் மசகு எண்ணெய் விலைக்கேற்ப

## விலைகளை குறைக்க முடியாது



மசகு எண்ணெய் சுத்திகரிப்பின் மூலம் நாட்டின் மொத்த எரிபொருள் தேவையில் 30 சதவீதம் மாத்திரமே ஈடுசெய்யப்படுகிறது. 70 சதவீதம் நேரடி முடிவுப்பொருளாக எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது. அந்த 30 சதவீதத்தினுள் டீசல், பெற்றோல், விமானத்துக்கான எரிபொருள், மண்ணெண்ணெய், நெப்தா மற்றும் உலை எண்ணெய் உள்ளிட்ட 6 பொருட்கள் உள்ளடங்கும். எனவே, குறைவடையும் மசகு எண்ணெய் விலைக்கு ஏற்ப அனைத்து எரிபொருட்களின் விலைகளையும் குறைக்க முடியாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் தெரிவித்தார்.

முன்னதாக பல அரசாங்கங்கள் சலுகை விலையில் டீசல் வழங்கிவந்தது. தற்போது, சலுகை நீக்கப்பட்டு இறக்குமதி விலைகேற்ப வழங்கப்படுகிறது. கடந்த காலங்களில் டீசல் இறக்குமதியில் லீற்றர் ஒன்றுக்கு 30சதவீதம் நட்டம் நிலவிவந்தது. தற்போது நட்டத்துக்கு மாறாக ஒரு ரூபாய் அளவில் இலாபம் ஏற்பட்டுள்ளது. எனினும், 5 -10 ரூபாய் வரை விலை குறைக்க முடியாது. அவ்வாறு செய்தால் அடுத்த எரிபொருள் அளவை எம்மால் கொள்வனவு செய்யமுடியாது. தற்போது, மண்ணெண்ணெய்யோ அல்லது வேறு பெற்றோலிய உற்பத்திகளின் விலையையோ குறைப்பு செய்தால் நட்டம் ஏற்படும். எனினும், பெற்றோல் இறக்குமதியில் அண்மைய காலங்களில் லீற்றருக்கு 70 ரூபாய் அளவில் இலாபம் ஏற்பட்டது. எனவேதான் பெற்றோலின் விலை குறைக்கப்பட்டது. உலக சந்தையின் விலைகுறைப்பின் பலனை 30 நாள்களின் பின்னரே நாம் அனுபவிக்க முடியும். எனவே, குறைவடையும் மசகு எண்ணெய் விலைக்கேற்ப எதிர்வரும் காலங்களில் எரிபொருட்களின் விலைகளை மேலும் குறைக்க முடியுமென எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

தபால் ஊடாக

## கடவுச்சீட்டுகளைப் பெறலாம்



கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கான முழு விண்ணப்ப முறைமையையும் தபால் ஊடாக மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக முதலீட்டு மேம்பாடு அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். எதிர்க்கட்சி எம்.பி கயந்த கருணாதிலக்க எழுப்பிய வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ள காலத்துக்கு முன்பாக வெளிநாட்டுக்கு செல்ல வேண்டுமாக இருந்தால், அது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து கடவுச்சீட்டை ஒருநாளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பதிவுகளை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்றை முன்னாள் அமைச்சர் தம்மிக்க பெரேரா அறிமுகப்படுத்தியிருந்தார். எனினும் இதிலும் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

இதனால் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் மாவட்ட காரியாலயங்கள் ஊடாக நாளொன்றுக்கு குறிப்பிட்டளவு கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

> **“ கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ள காலத்துக்கு முன்பாக வெளிநாட்டுக்கு செல்ல வேண்டுமாக இருந்தால், அது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து ஒருநாளில் பெற்றுக்கொள்ள முடியும்**

இதேவேளை இரட்டைக் குடியுரிமையை பெறுவதற்காக நாட்டுக்குள் விண்ணப்பித்துள்ள நபர்கள் தொடர்பான புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கை கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தால் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதிலும் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

**வாடகைக்கு**

5 படுக்கை அறைகள், வத்தளை அல்விஸ் டவுனில் சகல வசதிகளுடன், லைசியம் பாடசாலைக்கு நடந்து செல்லும் தூரத்தில் அழைக்கவும் 0772789494, 0777760053

## உயர்தரப் பரீட்சையை பிற்போட்டால் பிரச்சினை



பா.நிரோஸ்

டிசெம்பரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள உயர்தரப் பரீட்சையை மீண்டும் காலந்தாழ்த்தினால் சிக்கல் ஏற்படும் என தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பரீட்சைகள் திணைக்களம் அறிவிக்கும் தினத்தில் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இம்முறை நவம்பர் மாதம் நடைபெறவிருந்த பரீட்சையை, நாம் இரு வாரங்களுக்கு காலந்தாழ்த்தி டிசெம்பர் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். டிசெம்பரில் 41 இலட்சம் மாணவர்களுக்கும் பாடசாலை விடுமுறை. ஒருவேளை இப்பரீட்சையை பெப்ரவரி மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானித்தால் பாடசாலை நாள்களுக்கும் பரீட்சைக்கும் இடையில் சிக்கல் ஏற்படும். 2,800 பரீட்சை மத்திய நிலையங்களுக்காக 10 ஆயிரம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க நேரிடும் எனவும் தெரிவித்தார்.

> **“ உயர்தரப் பரீட்சையை பெப்ரவரி மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானித்தால் பாடசாலை நாள்களுக்கும் பரீட்சைக்கும் இடையில் சிக்கல் ஏற்படும். 2,800 பரீட்சை மத்திய நிலையங்களுக்காக 10 ஆயிரம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க நேரிடும்**

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தயாராவதற்கு காலம் போதாது என்றும், இதனால் எதிர்வரும் டிசெம்பரில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள குறைந்தது இரண்டு மாதங்களாவது பரீட்சையை ஒத்திவைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பாராளுமன்றத்தில் நேற்று (03) விசேட கோரிக்கைகளை விடுத்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கம்பஹா மாநகர சபை**

**2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களை பதிவு செய்தல்**

2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை பதிவு செய்தல் 2022.10.05 ஆம் திகதி முதல் 2022.11.04 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை நடைபெறும். பதிவு செய்வதற்கான முழுமையான விபரங்களை தெரிந்து கொள்வதற்கு **www.gampha.mc.gov.lk** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**எரங்க சேனாநாயக்க**
**நகரசபை ஆணையாளர்**
**மாநகர சபை**
**கம்பஹா**
**033 2222275**
**2022.09.27**

# “ஆற்றலை வெளிக்காட்டும் பெண்களை அடக்கி வைக்கத் தேவையில்லை”

## டொக்டர் ஜலீலா முஸம்மில்

■ ஏ.எச்.ஏ ஹூஸைன்

பெண்கள் தமக்கான முன்னேற்றத்தின் வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்க வேண்டும்; சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஹயாத்துமுஹம்மது ஜலீலா முஸம்மில் தெரிவித்தார்.

டொக்டர் ஹயாத்துமுஹம்மது ஜலீலா முஸம்மில் எழுதி வெளியிட்ட ‘சிறகு முளைத்த மீன்’ கவிதை நூல் வெளியீட்டு விழாவில், நூல் ஏற்புரையின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய டொக்டர் ஜலீலா, சமகாலத்தில் பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு



நிறைய சுதந்திரம் இருக்கின்றது. வரையறைகளைத் தகர்க்கத் தொடங்கியிருக்கும் பெண்கள் மீது விமர்சனங்கள் எழுவது தவிர்க்க முடியாதது.

ஆனால், இந்த விமர்சனங்களில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. பெண்களுக்கான வெளிப்படை உலகம், முன்னரைக் காட்டிலும் இப்பொழுது பரந்து விரிந்து கிடக்கிறது. அது ஈர்க்கிறது; திசை காட்டுகிறது. பெண்களது ஆற்றல்கள் படைப்புகளாக, சுதந்திரமாக வெளி வந்தவண்ணமுள்ளன. பெண்களது பார்வை கூர்மை அடைந்திருக்கின்றது.

ஆற்றலை வெளிக்காட்டும் பெண்களை அடக்கி வைக்கத் தேவையில்லை. மாறாக, அவர்களை ஊக்கப்படுத்துவதே, உயர்ந்த சிந்தனையின் வெளிப்பாடாக இருக்கும். எவ்வளவுதான் திறமைகளைப் பெண்கள் கொண்டிருந்தாலும், திருமணம் என்ற கட்டமைப்புக்குள் அகப்பட்ட பின்னர், பெண்களின் ஆற்றல்கள் முடங்கி விடுகின்றன; இது தான் யதார்த்தம்.

பெண்களுக்கு வேலைப்பளுக்களின் அதிகரிப்பு இதற்கு ஒரு காரணம். ஆனாலும், இத்தகைய தடைகளையும் தாண்டி பெண்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்து எழுந்து நிற்கிறார்கள். இதை முழுமனது கொண்டு பாராட்டி ஊக்கப்படுத்துவது, சமுதாயக் கடமையாகும்” என்றார்.



# “கஞ்சி குடித்தாவது வாழவிடுங்கள்”

## சட்டவிரோத மீன்பிடிக்கு துணைபோகும் அதிகாரிகளை மாற்றவும்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரி, முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தை நேற்று (03) காலை முற்றுகையிட்ட மீனவர்கள், தமக்கான தீர்வு கிடைக்கும் வரை போராடப் போவதாகத் தெரிவித்து, கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில், மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர் .குறிப்பாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கிடைக்காத நிலையில், பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தொழிலுக்கு சென்று வருகின்ற நிலையில், கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றார்கள்.

பல்வேறு இன்னல்களை அனுபவிக்கும் மீனவர்கள், “எமது நிலைமையை புரிந்து கொள்ளாத அதிகாரிகள், சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாக உள்ளனர். இவ்வாறான அதிகாரிகள் எமக்குத் தேவையில்லை. இவர்களை உடனடியாக மாற்றம் செய்து, தீர்வைத் தர வேண்டும்” என்று வலியுறுத்தி போராடி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்கள், கஞ்சி குடிக்கும் நிலைக்கு வந்துள்ளார்கள் எனவும் அந்த நிலைமையையாவது காப்பாற்றுங்கள் என்பதை அடையாளப்படுத்தி, குறித்த போராட்டத்தில் கஞ்சி காச்சி பரிமாறியிருந்தனர்.

நேற்று காலை கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் உள்ளே செல்ல அனுமதிக்காத



போதிலும், பின்னர் அனுமதித்தனர். தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தேசிய கடற்றொழில் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் தமக்கான தீர்வு வரும் வரையில், குறித்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர்.



# மட்டக்களப்பில் சைக்கிள் பாதை அங்குரார்ப்பணம்

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாநகர சபையுடன் யுனிசெப் மற்றும் செரி நிறுவனம் ஆகியவை இணைந்து முன்னெடுக்கும் ‘சிறுவர் நேய மாநகரம்’ செயற்றிட்டத்தின் ஊடாக, ஒழுங்கமைக்கப்பட்ட மாணவர்களுக்கான சைக்கிள் பாதை நேற்று (03) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சிறுவர்களின் எதிர்கால உடல்-உள மேம்பாட்டை கருத்தில்கொண்டு, அவர்கள் மத்தியில் சைக்கிள் பாவனையை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பான நிகழ்வு, மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன் தலைமையில், கல்லடி மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் சைக்கிள் பவனியாக ஆரம்பித்து, சைக்கிளுக்காக ஒதுக்கப்பட்ட பகுதி ஊடாக, மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை வரையில் சென்றது.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்களான து. மதன், சிவம்பாக்கியநாதன், ஜெயா, மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் க. ஹிகரராஜ், யுனிசெப் மற்றும் செரி நிறுவனங்களின் அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்தை மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தெரிவித்தார்.




# “கல்விதான் எமது உரிமைகளை பெற்றுத் தருகிறது”

■ வி.ரி சகாதேவராஜா

உலகில் எதற்கும் இல்லாத சக்தி கல்விக்கு இருக்கின்றது. இந்தக் கல்விதான் எமது உரிமைகளைப் பெற்றுத் தருகின்றது. அது ஒரு சமூக மாற்றத்துக்கான கருவியும் கூட என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்தார்.

சிலோன் பிரிட்டிஷ் கொலிஜ் புதிய வனத்தாப்பட்டியில், இம்முறை பல்கலைக்கழகத்துக்கும் கல்வியியல் கல்லூரிக்கும் தெரிவான எட்டு மாணவர்களை பாராட்டுகின்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு கல்லூரியின் முகாமைத்துவ பணிப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தலைமையில், புதிய வளத்தாப்பிட்டி நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் (02) இந்நிகழ்வு நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; “1994ஆம் ஆண்டு மீள் குடியேற்றப்பட்ட இக்கிராமம், கல்வித்துறையில் முன்னேறி வருவது சந்தோஷமாக இருக்கின்றது. இங்கு அனுபவங்களைப் பரிமாறிய மாணவர்களும் பெற்றோர்களும், எவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் கல்வியை தொடர்ந்தார்கள் என்பதை எடுத்துக் கூறினார்கள். உண்மையிலேயே இதுதான் வெற்றி; இது தான் சாதனை” என்றார்.



### யாழ்ப்பாணக் கோட்டையில்

# அநாகரிக செயற்பாடுகளை தடுக்க இணைந்த நடவடிக்கை

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாண கோட்டை பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராக, பொலிஸாருடனும் தொல்லியல் திணைக்களத்தினருடனும் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மாநகர மேயர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கோட்டை பகுதியை நேற்று (03) பார்வையிட்ட மாநகர மேயர் அங்கு இடம்பெற்றுவரும் அநாகரிக செயற்பாடுகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் நேரடியாக அதனை அவதானித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, யாழ். மாநகர மேயர் மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; கோட்டை பகுதியில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள் இனங்காணப்பட்டால், அவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**“ கோட்டை பகுதியில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள் இனங்காணப்பட்டால், அவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்**

யாழ்ப்பாண கோட்டை பகுதி சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் மற்றும் போதை பொருள் பாவனை மையமாக மாறிவருகிறது. கோட்டை பகுதியை சுற்றியுள்ள பற்றைக் காடுகளை அகற்றுமாறு நீதிபதிகள் யாழ். மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆகவே, கோட்டை பகுதியை சுற்றியுள்ள பற்றைக் காடுகளை உடனடியாக அகற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

யாழ்ப்பாணக் கோட்டை பகுதி தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால், தொல்லியல் திணைக்களத்தினருடன் பேசி இதற்கான நடவடிக்கை எடுக்க உள்ளோம். அவர்களும் இதற்கு சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர் என்றார்.

### மொழி புரியாமையே

# இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வின்மைக்கு காரணம்



■ எம். எஸ். எம் நூர்தீன்

தேசிய கல்வி நிறுவகத்தின் வெளிநாட்டு மொழிகள் மற்றும் சுதேச மொழிகள் பிரிவுக்குப் பொறுப்பான ஆச்சார்ய ராஜகீய பண்டித பூஜ்ய தெரிபெஹே மேதங்கர தேரர் தலைமையிலான குழுவினர் நேற்று (03) காத்தான்குடிக்கு விஜயம் செய்தனர். அதன் ஓர் அங்கமாக, புதிய காத்தான்குடி மஃஹதுஸ் ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரிக்கும் வருகை தந்திருந்தனர்.

கல்லூரி நிர்வாகத்தினருடன் சினேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்ட தேரர் தலைமையிலான குழுவினர், சிங்கள மொழியைக் கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். மொழிகளுக்கிடையே காணப்படுகின்ற இடைவெளியே,

**“ சிங்கள மொழியைக் கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன், மொழிகளுக்கிடையிலான இடைவெளியே, புரிந்துணர்வின்மைக்கு காரணம் என்றனர்**

புரிந்துணர்வின்மைக்கு காரணமாகும். ஒருவரின் மொழி இன்னொருவருக்கு புரியுமாயின் 90 சதவீதமான பிரச்சினைகள் தீர்ந்துவிடும் எனவும் தெரிவித்தார்.

மஃஹதுஸ் ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.சீ.எம் றிஸ்வான் மதனி, அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஏ.சீ ஸெயினுல் ஆப்தீன் மதனி, பொருளாளர் அல்ஹாஜ் ஏ.எம்.எம் மாஹிர், கல்லூரியின் விரிவுரையாளர்கள், நிர்வாகிகள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.



# புதிய நிர்வாகிகள் தெரிவு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் (02) காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது, 2022, 2023ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். சம்மேளனத்தின் புதிய தலைவராக காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாயலின் தலைவர் ரஊப் ஏ மஜீத்தும் பொதுச் செயலாளராக காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சார்பில் அஷ்ஷெய்ஹ் ஏ.எல்.எம் சபீல் நழீமியும் பொருளாளராக புதிய காத்தான்குடி நூறானிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல் சார்பில் எஸ்.எச் அன்சாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்

# பரீட்சை நடத்த தவறியமையால் மூவர் பணியிடை நீக்கம்

■ எம். றொசாந்த்

பரீட்சை கடமைகளில் இருந்து தவறிய குற்றச்சாட்டுக்காக விசாரணைகள் முடிவடையும் வரை யாழ்ப்பாண பல்கலைகழக துறைத்தலைவர், விரிவுரையாளர், நிர்வாக உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் பல்கலைக்கழக பேரவை பணி இடை நீக்கம் செய்துள்ளது.

யாழ். பல்கலைகழகத்தில் சனிக்கிழமை (01) நடைபெற்ற பேரவைக் கூட்டத்தின் போதே, விசாரணைகள் முடிவடையும் வரை மூவரையும் பணி இடை நீக்கம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

செப்டெம்பர் மாதம் கலைப்பீட மாணவர்களின் ஒரு துறைக்கான பரீட்சைக்கு வினாத்தாளை தயார் செய்யாத காரணத்தால், பரீட்சைக்கு தோற்ற தயாரான நிலையில் வந்த மாணவர்கள், பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் திரும்பி சென்றிருந்தனர்.

இது தொடர்பிலான முறைப்பாட்டின் பிரகாரம், பல்கலைகழக மூதவையால், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, மூதவையின் பரிந்துரையின் அடிப்படையில், பேரவையால் பரிசீலிக்கப்பட்டு, முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக, மூவரையும் விசாரணைகள் முடிவடையும் வரையில் பணி இடை நீக்கம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை , மாணவர்களுக்கான வினாத்தாளைத் தயார் செய்யாது, துறைத் தலைவர், விரிவுரையாளரையும் விரிவுரையாளர், துறைத்தலைவரையும் மாறி மாறி கைக்காட்டியுள்ளனர். அதனால், இறுதிவரை வினாத்தாள் தயார் செய்யப்படவில்லை.

பரீட்சை வினாத்தாள் தயார் செய்யாது, பரீட்சைக் கடமையில் இருந்து தவறியதாக, துறைத்தலைவர் மற்றும் விரிவுரையாளர் மீது குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான வினாத்தாள் தயார் செய்யப்படாமை, பரீட்சை நடைபெறாமை ஆகியவை தொடர்பில், நிர்வாக அதிகாரி உரிய தரப்புகளுக்கு உரியமுறையில் அறிவிக்கவில்லை எனக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.



### விசேட தேவையுடைய மாணவர்களின் சிறுவர் தினம்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் கண்டி கிளையால் நடத்தப்பட்டு வரும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான 'டபோடில்ஸ்' (DAFFODILLS) பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. (மொஹொமட் ஆஸிக்)



### தெளிவுபடுத்தும் நிகழ்வு

ஊவா மாகாண மக்கள் ஒன்றியத்தால், 'நாட்டின் நிலையும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' குறித்து, சமூக மேம்பாட்டாளர்களைத் தெளிவுபடுத்தும் நிகழ்வு, நேற்று (03) பதுளை, வெலிகம விருந்தகத்தில் நடைபெற்றது.

(எம். செல்வராஜா)



### சிறுவர் தின நிகழ்வு

ஹேயஸ் தோட்டத்தின் சாரதா முன்பள்ளி பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வு, சமூக சேவையாளர் எஸ்.எம் விஸ்வநாதன் தலைமையில் நேற்று (03) பாடசாலை கட்டடத்தொகுயில் நடைபெற்றது. (சிவாணிஶ்ரீ)




### கர்ப்பிணிகளுக்கு நிதியுதவி

இராகலை பிரதேசத்திலுள்ள கர்ப்பிணிகளின் போசாக்கை மேம்படுத்தும் வகையில், 5,000 ரூபாய்க்கான பண வவுச்சர் வழங்கிவைக்கப்பட்டது. ஜப்பான் 'கோஜோ' நிறுவனத்தின் கீழ் இயங்கும், செஜய நுண்நிதி நிறுவனத்தால் 410 கர்ப்பிணிகளுக்கு வவுச்சர்கள் வழங்கப்பட்டன. இராகலை பொதுச் சுகாதார பரிசோதகர் காரியாலயத்தில் நேற்று (03) காலை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, பொதுச் சுகாதார பரிசோதகர் வைத்தியர் எ. கோபிராஜ் தலைமை தாங்கினார். (ஆ. ரமேஸ்)





### புலமைப்பரிசில்

நன்னம்பிக்கை கல்வி நிதியம், இம்முறையும் 67 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (02) ஹட்டன் வெப்ஸ்டர் சர்வதேச பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், நன்னம்பிக்கை கல்வி நிதியத்தின் தலைவர் எஸ். சுப்பையா, செயலாளர் பேராசிரியர் தை. தனராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (பி. கேதீஸ்)



### கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி, பாடசாலை புத்தகங்கள், கற்றல் உபகரணங்களை வழங்கும் இரண்டாவது வேலைத்திட்டத்தை, ஐக்கிய சமூக அமைப்பு ஹல்தும்முல்ல வித்தியாலயத்தில் முன்னெடுத்தது. (நடராஜா மலர்வேந்தன்)

---

மலையகத்தில் அடைமழை

# பெண் மரணம்; இருவர் காயம்

## வான் கதவுகளும் திறக்கப்பட்டன


■ மலையக நிருபர்கள்

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக, ஏற்பட்ட அனர்த்தத்தில் சிக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் அப்பெண்ணின் மகள் தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளார்.

திம்புள்ளை, பத்தனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள வீட்டின் ஒரு பகுதி, மண்சரிவு ஏற்பட்டு இடிந்து விழுந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.


இவ்வாறு உயிரிழந்தவர் 46 வயதுடைய ராமசாமி காளியம்மா என்றும் அவர் மூன்று பிள்ளைகளின் தாய் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை ஹட்டன், காமினிபுர பிரதேசத்தில் வீடொன்றின் மீது பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளதால் வீடு பாரிய



சேதமடைந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று (03) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேலும், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள்



திறக்கப்பட்டுள்ளதுடன், லக்ஷபான நீர்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், விமலசுரேந்தி நீர்தேக்கத்தின் அணைக்கட்டுக்கு மேலாக நீர் வெளியேறி வருவதனால் நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளிலும் அதன் கீழும் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

பேராதனை பல்கலைக்கழகத்தின்

## மற்றுமொரு மாணவன் மாயம்

■ ஷேன் செனவிரத்ன

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் நான்காம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர், நேற்று (03) அதிகாலை தொடக்கம் காணாமல் போயுள்ளார் என, மாணவர் தங்கியிருந்த விடுதிக்கு பொறுப்பானவரால் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கனேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான புலஸ்தி பிரமுதித் பெரேரா என்ற மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணிக்கு குறித்த மாணவன் பல்கலைக்கழக விடுதியிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் வெளியேறும் முன்னர் கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதமும் பேராதனை பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

மாணவனைத் கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளை பேராதனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

---

தலைமறைவான மலையக அரசியல்வாதிகள்

## மீண்டும் துள்ளுகின்றனர்

### உதயா எம்.பி பரிகாசம்

■ எஸ்.கணேசன்



கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வக்காளத்து வாங்கி, சிறிது காலம் தலைமறைவான மலையக அரசியல்வாதிகள் சிலர், மீண்டும் துள்ள ஆரம்பித்துள்ளனர் என தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார், அவர்களின் முகமூடி அரசியல் இனியும் மக்கள் மத்தியில் எடுபடாது; பதவிக்கும் பணத்துக்கும் விலைபோகாத எங்கள் பின்னாலேயே மக்கள் அணிதிரள்வார்கள் என்றார்.

பத்தனை தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்ட கமிட்டி தலைவர்களுடான சந்திப்பு, தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "நாட்டில் ஒரு புறம் விலை அதிகரிப்பு இடம்பெறுகின்றது. மறுபுறத்தில், வரி அதிகரிப்பு இடம்பெறுகின்றது. இதனால் மக்கள் பெரும்பாடு படுகின்றனர். மூவேளை உண்டு வாழ்ந்த மக்கள், உணவு வேளையை சுருக்கியுள்ளனர். மேலும், சிலர் உண்ணும் அளவை குறைத்துள்ளனர். சிலருக்கு உணவு உண்ண வழியில்லை. பிள்ளைகள் பாடசாலைகளில் மயங்கி விழும் நிலையும் உள்ளது. தற்போதைய நிலைமை நீடித்தால், அடுத்து வரும் மாதங்களில் நிலைமை மோசமாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் சுமைக்கேற்ற ஊதியம் இல்லை. தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது. ஆனால், பழைய சம்பளம்தான் வழங்கப்படுகின்றது. எனவே, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்காக நாம் போராடுவோம். தமிழ் முற்போக்கு கூட்டணியாக குரல் கொடுப்போம். மற்றையவர்களைபோல ஏமாற்று அரசியல் நடத்த மாட்டோம்" என்றார்.

---

உயிரிழந்த பெண்ணின்

## இறுதிக் கிரியைகளுக்காக நிதி உதவி

■ ரஞ்சித் ராஜபக்ஷ, எம்.கிருஸ்ணா

திம்புள்ள- பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்து இன்று உயிரிழந்த 46 வயதுடைய மூன்று குழந்தைகளின் தாயான இராமசாமி காளியம்மாவின் இறுதிக் கிரியைகளுக்காக, நுவரெலியா மாவட்ட அனர்த்த நிவாரண நிலையம் நிதியுதவி



வழங்கியுள்ளது.

இதற்கமைய, 25,000 ரூபாய் பணம், உயிரிழந்த பெண்ணின் கணவனிடம் இன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத் மற்றும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித்

---

## சடலத்தை பொறுப்பேற்குமாறு வேண்டுகோள்

■ எம்.கிருஸ்ணா

சுகவீனமடைந்த நிலையில், வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்ககப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவரின் சடலத்தை பொறுப்பேற்பதற்கு எவரும் இதுவரை முன் வரவில்லையென நோட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டவளை, லொனக் தோட்டத்தைச் சேர்ந்த 62 வயதுடைய வெள்ளச்சாமி ஐயம் பெருமாள் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர், சுகவீனம் அடைந்த நிலையில், செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 27ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நோட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

---

## ஜனாதிபதியின் செயலை மெச்சினார் செந்தில்

கொழும்பின் சில முக்கிய பிரதேசங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து, செப்டெம்பர் 23 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சால் வர்த்தமானி வெளியிடப்பட்டது. வெளியிட்ட வர்த்தமானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மீளப்பெற்றமை வரவேற்கத்தக்கது என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர், வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

பாராளுமன்ற கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், உயர்நீதிமன்றம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி



மாளிகை, கடற்படை தலைமையகம், பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகம், பிரதமர் அலுவலகம், அலரிமாளிகை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படை தளபதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் ஆகிய பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

இதனால், இலங்கையில் அசாதாரண நிலை இன்னும் காணப்படுவதாக சர்வதேச சமூகம் கருதுகின்றது. எனவே, இவ்வர்த்தமானி பிரகடனப்படுத்தப்பட்டமையால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், சர்வதேச உதவிகள் கிடைப்பது தாமதமாகும். எனவே, நாட்டின் நலன்கருதி சர்வதேச ரீதியான உறவுகளை வலுப்படுத்தும் முகமாக, இந்த வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி மீளப்பெற்றிருந்தமை வரவேற்கத்தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# விலை குறைப்பால் பொதிகள், துண்டுகளை விழுங்கி விடக்கூடாது

விலைகள் அதிகரிக்கப்படும்போது மட்டுமே மின்னல் வேகத்தில் அதிகரித்துவிட்டு, விலையை குறைக்கும் போது ஆமை வேகத்தை கையாளும் நடைமுறையொன்று அரசாங்கங்களுக்கு புதிதல்ல. இந்த அரசாங்கமும் அதே பல்லவியை பாடிக்கொண்டிருக்கின்றது. அறிமுகப்படுத்தும் சூத்திரத்தை, விலை குறைப்புக்கான சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே மறந்துவிடுகின்றது.

விலைகள் குறைக்கப்படும் போது, சேவைகளின் கட்டணங்களில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படுவதில்லை. என்னதான் விலைகளை குறைத்தாலும் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமைகளில் எவ்விதமான மறை (-) தாக்கத்தைச் செலுத்துவதே இல்லை. எரிபொருளுக்கான சூத்திரத்தை அறிமுகப்படுத்திய அரசாங்கம், ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியிலும் அதனை அமல்படுத்துவதாக கூறியது. அவ்வாறு அமல்படுத்தினாலே பலருக்கும் ஆத்திரம் வராது. ஆனாலும், எரிபொருள்களுக்கான விலை குறைப்பின்போது ஏனைய, சேவைகளின் கட்டணங்களில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படுவதில்லை.

பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகள் மத்தியில் சுகாதாரத்தை உறுதி செய்தல் மற்றும் சுகாதாரப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில், உள்நாட்டில் சுகாதார அணையாடைகளைத் தயாரிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பிரதான 05 மூலப்பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்கு வரிச்சலுகையை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் மேற்படி தீர்மானத்துக்கமைய, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 10 சுகாதார அணையாடைகள் அடங்கிய ஒரு பக்கெற்றின் விலை 50 தொடக்கம் 60 ரூபாயால் குறைவடையும் என்றும் அதிகபட்ச சில்லறை விலை 260 தொடக்கம் 270 ரூபாயாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணையாடைகளின் விலை அதிகரிப்பால், பெண்களும் பாடசாலை மாணவிகளும் பல்வேறான அசௌகரியங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். பாடசாலைகளில் மாணவிகளின் வரவில் வீழ்ச்சி, பாதுகாப்புடன் கடமைகளுக்கு செல்லமுடியாத நிலைமையை பெண்கள் எதிர்கொண்டிருந்தனர்.

அணையாடைகளை கொள்வனவு செய்வதற்கு போதுமான வருமானம் இன்மையாலும் தலைக்கு மேல் எகிறி நிற்கும் விலை அதிகரிப்பாலும், மாதவிடாய் காலங்களில் பல பெண்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறானவர்களுக்கு அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு சந்தோஷமானதாய் இருக்கும்.

கோதுமை மா உள்ளிட்ட பிஸ்கட் தயாரிப்புக்கான மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தபோது, பிஸ்கட் பக்கெட்டுகளின் விலைகளும் அதிகரித்தன. அதனால், பிஸ்கெட் விற்பனையில் பாரிய வீழ்ச்சியை சந்திக்கவேண்டிய நிலைமை உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டது. அதன்பின்னர் விலைகள் குறைக்கப்பட்டன. எனினும், பக்கெட்டுகளில் இருக்கவேண்டிய பிஸ்கட்டுகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

அத்தியாவசிய பாவனைப் பொருட்களில் இதேபோன்ற உத்திகள் கையாளப்படுவது ஒன்றும் புதிதல்ல. இதேபோன்ற ஏமாற்றுத்தனமான யுக்திகளை, அணையாடைகளிலும் கையாண்டுவிடக் கூடாதெனக் கேட்டுக்கொள்கின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

வெளியில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது எனத் தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் திருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி அலாதியானது. பொது நலத்தொண்டுகளில் இளைய தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானதே.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளை தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தைக் குளிரவைக்கும் செயலாகும். புறஅழகை விட, அகஅழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்களின் துன்பங்களைக் கண்டும் காணதவர் போல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தனியார் பஸ் நடத்துநருக்கு சீருடை முக்கியம்

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் போன்ற இன்னல்களை மக்கள் எதிர்நோக்கி, தட்டுத்தடுமாறி சமாளித்து, ஒருவாறு எழுந்து நடக்கும் நிலைமைக்கு வந்துகொண்டு இருக்கிறார்கள்.

இந்நிலைமையில், சாதாரண மக்களை எல்லாத் தரப்பாரும் ஏமாற்றுகின்றார்கள் என்ற கவலை மனதுக்குள் படர்கின்றது. கடைகளில், தரமில்லாவைவையும் நிறைகுறைவான பொருட்களும் கட்டுப்பாட்டு விலைகள் இல்லாமையும். பஸ்ஸில் ஏறினால் டிக்கட்டும் இல்லை, மிச்சக்காசும் இல்லை என்ற நிலைமைகள் தொடர்கின்றது.

குறிப்பாக, இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில், நடத்துநர் அருகில் வந்து தனது கடமையைச் செய்யமாட்டார். இறங்கும் இடம் வரும்போது, நடத்துநரின் பக்கத்தில் சென்று காசைக் கொடுத்தால், மிச்சக்காசும் இல்லை; டிக்கட்டும் இல்லை. இறங்கும் அவசரத்தில் அநேகமானவர்கள் டிக்கட்டையும் மிச்சக்காசையும் கேட்காமலே இறங்கி விடுகின்றார்கள்.

தனியார் பஸ்களில், நடத்துநர் யார் என்பதை அறிவதே சிரமமாக இருக்கிறது. நடத்துநரும் சாரதியும் சீருடை அணியவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. இப்பொழுது அதைப்பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. அதைவிட, தனியார் பஸ்களில், நகரங்களில்கூட ரிக்கட் வழங்குவதில்லை. இதனால் நாளுக்கொரு கட்டணம், ஆளுக்கொரு கட்டணம் அறவிட அவர்களுக்கு வசதியாக இருக்கிறது.

எனவே, மேற்குறித்த குறைபாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்படும் பயணிகள் சார்பாக கோரிக்கை முன்வைக்கின்றேன்.

இ. பாஸ்கரன்

## தேசிய சபையும்

# தமிழ், முஸ்லிம்களின் வகிபாகமும்

மொஹமட் பாதுஷா

இந்தியாவின் சினிமாத்துறை, அந்நாட்டின் அரசியலுக்கு பல நல்ல அரசியல்வாதிகளைக் கொடுத்துள்ளது. நமது நாட்டின் அரசியலானது, நல்ல நடிகர்களை உருவாக்கி இருக்கின்றது. ஆட்சியாளர்கள் உள்ளடங்கலாக, பெருந்தேசிய அரசியல்வாதிகள், சிறுபான்மை அரசியல்வாதிகள் என ஏகப்பட்டோர், இந்த நடிகர்கள் பட்டியலில் உள்ளடங்குகின்றனர்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர், முதலில் சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவமுயன்றார். பின்னர், தேசிய அரசாங்கத்தை நிறுவ நினைத்தார். பல்வேறு காரணங்களால், அவை இரண்டுமே கைகூடவில்லை.

ஆயினும், நாட்டில் பிரச்சினைகளை கையாள்வதற்காக மட்டுமன்றி, குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதன் மூலம், தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கும், சர்வதேச அழுத்தங்களை குறைத்துக் கொள்வதற்கும், ஏதாவது ஒரு கட்டமைப்பை நிறுவ வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருந்தது. நாட்டுக்கும் அவ்வாறான தேவை ஒன்று உள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, இப்போது 'தேசிய சபை' நிறுவப்பட்டுள்ளது. தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் மட்டுமன்றி, மலையக மக்களின் பிரதிநிதிகளும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஆனால், செப்டெம்பர் 29ஆம் திகதி, தேசிய பேரவையின் கன்னி அமர்வு இடம்பெற்ற போது, சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த எம்.பிக்கள் சிலர் கலந்து கொண்டிருக்கவில்லை என்பது கவனிப்புக்குரியது.

டக்ளஸ் தேவானந்தா, ஏ.எல்.எம் அதாவுல்லா, சி.வி விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார், நஸீர் அஹமட் ஆகியோர் கலந்துகொள்ளாதவர்களுள் முக்கியமானவர்கள். மேலும், இதில் இருவர் அமைச்சர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுதவிர, எதிர்க்கட்சித் தலைவரும் இதில் கலந்து கொள்ளவில்லை.

இந்தத் தேசிய பேரவை தொடர்பில் பல்வேறு கருத்துகள் உள்ளன. யதார்த்தபூர்வமான அரசியலோடு நெருங்கிப் போகாமல், கருத்தியல் ரீதியான அரசியலில் மட்டும் கவனம் செலுத்துகின்ற மக்கள் விடுதலை முன்னணி, "இது ஒரு வரலாற்று வித்தை" என்று கூறியிருந்தது.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஓரிரண்டு எம்.பிக்களுக்கும் இதில் பெரிதாக உடன்பாடு இல்லை என்பதை, அவர்களது கருத்துகள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன், இதில் கூட்டமைப்பு இணைந்து கொள்வதற்கு, தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்நிபந்தனையாக முன்வைத்துள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

விரும்பியோ விரும்பாமலோ, விளங்கியோ விளங்காமலோ, சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இதனை வரவேற்கின்றனர்; சில எம்.பிக்கள் எதிர்க்கின்றனர். இவை இரண்டையும் வழக்கம்போல, மூடுமந்திரமாகவே செய்ய எத்தனிக்கின்றனர். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று செயற்படுவது' அவர்களுக்குப் புதியதும் அல்ல.

எது எவ்வாறிருப்பினும், முதலாவது கூட்டத்திலேயே ஆளும் தரப்புக்கு ஆதரவளிக்கும் சில தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் கூட, இதில் கலந்து கொள்ளாமை என்னவோ போல் இருக்கின்றது. இது ஒரு வகையில் முதற்கோணல் என்பது மட்டுமல்லாமல், பல்வேறு கேள்விகள் எழுவதற்கும் காரணமாகியுள்ளது.

தேசிய சபை என்பது, இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து விதமான நெருக்கடிகளையும் கலந்துரையாடி, தீர்வுகளைத் தேடுவதற்கான ஒரு பொதுத் தளம் என்று கூறப்படுகின்றது.

அப்படியென்றால், முதலாவது அமர்விலேயே அரசாங்கத் தரப்பு அரசியல்வாதிகள் கூடக் கலந்து கொள்ளாமையை, அதில் அவர்கள் நம்பிக்கை அற்றவர்களாக இருக்கின்றார்கள் என்று எடுத்துக் கொள்ளவதா? அல்லது, அவர்களுக்கு 'தவிர்க்க முடியாத' வேறு வேலைகள் இருந்தன என்று கூறி, இந்தச் சந்தேகங்கத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதா என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுகின்றன.

இலங்கையில் நாடக பாணியிலான அரசியலும், அதில் பல நடிகர்களும் இருக்கின்றார்கள் என்பதே நாம் கண்ட உண்மையாகும். முன்னதாக, இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க, அறுதிப்பெரும்பான்மை வாக்குகள் தேவை என்று ராஜபக்ஷர்கள் கூறி, 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றார்கள்.

அதன் பிறகு, நிலைமைகளைக் கையாள்வது என்றால், ஜனாதிபதிக்கு அதிகரித்த அதிகாரம் இருக்க வேண்டுமெனக் கூறி, அரசியலமைப்பில் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றினார்கள். பின்னர், பசில் ராஜபக்ஷ எம்.பியானால், எல்லாம் சரியாகி விடும் என்றார்கள். கடைசியில், தம்மிக்க பெரேராவையும் அமைச்சராக்கிப் பார்த்தார்கள். ஆனால், நாட்டு மக்களுக்கு நல்லது எதுவும் நடக்கவில்லை.

மாறாக, அவர்கள் கொள்ளையடித்தார்கள்; நாட்டு மக்கள் எல்லாவற்றையும் இழந்து நடுத்தெருவுக்கு வந்தார்கள். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு பிரச்சினைக்கும் ராஜபக்ஷர்களின் சூத்திரம் தீர்வாக அமையவில்லை.

இதைப் பயன்படுத்தித்தான் ரணில் விக்கிரமசிங்க, தனது ஜனாதிபதி கனவை நனவாக்கிக் கொண்டார். அவரது சூட்சுமமான போக்குகள் தொடர்பில், நம்பிக்கையீனங்களும் எச்சரிக்கை உணர்வும் இன்று வரை உள்ளன. அவரது வருகையின் பின்னரும், நாட்டின் பிரச்சினைகள் அப்படியேதான் உள்ளன. ஆயினும், நெருக்கடிகள் 'ஒரு சொட்டு' குறைந்துள்ளதான தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, சர்வகட்சி அல்லது தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான முன்னெடுப்புகள் கைகூடாத நிலையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு தேசிய சபையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார்.

தேசிய சபை என்பது, தற்போது விமர்சிக்கப்படுவதைப் போல மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்கான ஓர் ஏற்பாடாக இருக்கலாம். மேலே குறிப்பிட்டதைப் போல, ராஜபக்ஷர்களும் இப்படித்தான் 69 இலட்சம், 20ஆவது திருத்தம், பசில் என, மக்களுக்கு 'பூச்சாண்டி' காட்டி ஏமாற்றினார்கள்.

அவ்வாறில்லாவிடின், 2015இன் பின்னரான நல்லாட்சிக் காலத்தில், மைத்திரியும் ரணிலும் சேர்ந்து முன்மொழிந்த 'நாடாளுமன்ற பேரவை' போல, ஓர் ஏட்டுச் சுரைக்காயாகவும் அமைந்து விட, நிகழ்தகவுகள் இல்லாமலில்லை.

தேசிய சபையானது, பேய்க்காட்டுவதற்காக அல்லது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டதாயினும், இதனால் நாட்டின் நெருக்கடிகளை முற்றாகத் தீர்க்க முடியாது என்று முன்கணிப்புகள் இருந்தாலும் கூட, இதைக் கொண்டு மக்களுக்கு ஏதாவது நல்லது செய்ய வாய்ப்பிருக்கின்றது என்பதை மறுத்து விடக்கூடாது.

அதாவது, ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், ஜே.வி.பி தலைவர், தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் இச்சபையின் உறுப்பினர்களது இதயசுத்தியுடனான, அரசியல் நோக்கற்ற செயற்பாட்டிலும் வினைத்திறனான பங்கேற்பிலுமே இச்சபையின் வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது.

நாம் எத்தனையோ சபைகள், ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்கள், உபகுழுக்கள், தெரிவுக்குழுக்கள், அறிக்கைக் குழுக்கள் போன்றவற்றை, இதற்கு முன்னர் கண்டிருக்கின்றோம். அவையெல்லாம் கடைசியில், எப்படி எந்தப் பலனுமற்றுப் போயின என்பதையும் நன்கறிவோம்.

அதுபோலவே, இதுவும் தோன்றினாலும், இதைத் தாண்டி நமது பங்களிப்புகளை வழங்குவது, காலத்தின் தேவையாகவுள்ளது. கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட பல முக்கிய குழுக்களில், சிறுபான்மையின அரசியல்வாதிகள் உள்ளடக்கப்படவில்லை. குறிப்பாக, முஸ்லிம்கள் அதிகம் வஞ்சிக்கப்பட்டு, புறமொதுக்கப்பட்ட வரலாறு இருக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், முஸ்லிம்களின் அல்லது தமிழர்களின் பிரதிநிதித்துவம் மறுக்கப்படுவதாகவும் இதன் ஊடாக, உரிமைக்கான குரல் நசுக்கப்படுவதாகவும் சிறுபான்மை மக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர்.

குறிப்பாக, "எங்களுக்கு வாய்ப்பு, அதிகாரம் தரப்படவில்லை; தந்திருந்தால் முஸ்லிம் சமூகத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் நாம் தீர்த்து வைத்திருப்போம்" என்ற தோரணையில்தான், முஸ்லிம் கட்சித் தலைவர்களும் எம்.பிக்களும் ஒப்பாரி வைத்து வந்தனர்.

அந்தவகையில் நோக்கினால், தேசிய சபை என்பது கூட, கிடைத்துள்ள வாய்ப்பு என்றுதான் கருத வேண்டும். இதனை காத்திரமாக, வினைத்திறனாகப் பயன்படுத்துவதன் ஊடாக, தங்களது 'செயற்றிறனை' நிரூபிப்பதற்கான களம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது.

தேசிய சபை, ஒரு காத்திரமான முன்னெடுப்பா அல்லது ஏமாற்று வித்தையா என்பது ஒருபுறமிருக்கட்டும். இன்னும் சில காலத்துக்கு இது இலங்கை அரசியலில் ஒரு முக்கிய கூறாக இருக்கப் போகின்றது என்றால், அதிலிருந்து முஸ்லிம்கள் விலகியிருக்க முடியாது. தமிழர்களின் நிலையும் இதுதான். ஆக, இப்போது நம்முன் இரண்டு தெரிவுகள் உள்ளன.

ஒன்று, உருவாக்கப்பட்டுள்ள தேசிய சபை, ஒரு போலி நாடகம் என்றால் அதனை முஸ்லிம், தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் மன்றத்தில் வெளிப்படையாகத் தெளிவுபடுத்திக் கூறுவதுடன், ஆசனத்தை வெறுமனே சூடாக்கிக் கொண்டிருக்காமல் அதிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

அல்லது, இது இன்றைய சூழலில் ஏதோ ஒருவகையில் செல்வாக்குச் செலுத்தப் போகின்றது; காரியமாற்றப் போகின்ற ஒரு சபையாக இருக்குமென்ற நம்பிக்கை இருந்தால், அந்த நம்பிக்கை கலையும் வரைக்காவது தேசிய சபைக்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதன் ஊடாக, தமது வகிபாகத்தை சரிவரப் பயன்படுத்த வேண்டும்.

மகாராஷ்டிரா

# ‘ஹலோ’வுக்கு பதிலாக ‘வந்தே மாதரம்’

மகாராஷ்டிரா மாநில அரச ஊழியர்கள் அலைபேசி அழைப்பின்போது ‘ஹலோ’ என்பதற்குப் பதிலாக ‘வந்தே மாதரம்’ என்பதைக் கட்டாயமாகக் கூற வேண்டும் என அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.



அத்துடன் அலுவலகத்தில் சந்திக்கும் மக்களிடமும் ‘வந்தே மாதரம்’ எனக்கூறியே வணக்கம் செலுத்த வேண்டும் என மகாராஷ்டிர அரசு உத்தரவிட்டுள்ளது.

‘ஹலோ’ என்பது வெறும் சாதாரண வார்த்தை எனவும், அவை மேற்கத்திய கலாசாரத்தின் பிரதிபலிப்பு என்பதாலும் இவ்வாறு கூறவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா

## பட்டரி வெடித்ததில் சிறுவன் உயிரிழப்பு



மகாராஷ்டிர மாநிலம், பால்கர் மாவட்டத்தில் உள்ள வசாய் பகுதியில், மின்சார இருசக்கர வாகனத்தை மின்னேற்றும் போது, அதன் பட்டரி திடீரென வெடித்துச் சிதறியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்த ஷபீர் ஷாநவாஸ் என்ற 7 வயது சிறுவன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

இந்நிலையில், இது குறித்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

புதுடெல்லி

## புதையலுக்காக நண்பனின் மகனை நரபலி கொடுத்த இளைஞர்கள்

புதையல் கிடைக்க வேண்டும் என்பதற்காக, தமது நண்பனின் மகனை, இளைஞர்கள் இருவர் நரபலி கொடுத்த சம்பவம் புதுடெல்லியில் இடம்பெற்றுள்ளது.

தெற்கு புதுடெல்லி பகுதியில் உள்ள லோதி கொலனியில், பல்வேறு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பீகாரை சேர்ந்த விஜயகுமார், அமர் குமார் ஆகியோர் அங்கு பணிபுரிந்து வந்துள்ள நிலையில், புதையல் மீது ஆர்வம் கொண்டிருந்த இருவரும், தன்னுடன் பணிபுரியும் சக நண்பரின் மகனான ஆறு வயதுச் சிறுவனை நரபலி கொடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி, ஒக்டோபர் முதலாம் திகதி குறித்த சிறுவனைக் கடத்திய இருவரும் அவனுக்கு போதைப்பொருளைக் கொடுத்து மயக்கமடையச் செய்து, பின்னர் தங்களது குடிசைக்குள் வைத்து கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர்.

இந்நிலையில், சிறுவன் காணமல்போனதால் அச்சமடைந்த பெற்றோர், அவனை ஊர் முழுவதும் தேடியுள்ளனர்.


இதன்போது அவர்கள் தற்செயலாக விஜயகுமார் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அங்கு கட்டிலுக்குக் கீழ் இரத்தம் கசிந்திருப்பது தெரியவந்ததால் சந்தேகமுற்று இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், அவர்கள் இருவரும் அச்சிறுவனை நரபலி கொடுத்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தூர்

## 6 ஆவது முறையாகவும் முதலிடம்



மத்திய அரசு 2016ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நாட்டின் தூய்மையான நகரங்களின் பட்டியலை வெளியிட்டு வருகின்றது.

அந்தவகையில் சுமார் 4,354 நகரங்கள் பங்கேற்ற இக்கணக்கெடுப்பில் தொடர்ந்து 6 ஆவது முறையாக, மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூர் நகரம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அதேசமயம் 2ஆவது இடத்தை குஜராத் மாநிலத்தின் சூரத் நகரமும், 3ஆவது இடத்தை மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள நவி நகரமும் பெற்றுள்ளன.

இவ் வரிசையில் தமிழ்நாட்டில் கோவை நகரம் 42ஆவது இடத்தையும் சென்னை 44ஆவது இடத்தையும் மதுரை 45ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

பெங்களூர்

## அதிர்ச்சித் தகவலை வெளியிட்ட இஸ்ரோ



இந்தியாவின் செவ்வாய் கிரக ஆராய்ச்சித் திட்டத்தை முன்னிட்டு விண்ணில் செலுத்தப்பட்ட மங்கல்யான் விண்கலம் எரிபொருள் தீர்ந்த நிலையில் செயலிழந்து விட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சுமார் 450 கோடி ரூபாய் செலவில் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி மங்கல்யான் பி.எஸ்.எல்.வி சி 25 ரொக்கெட் மூலமாக விண்ணில் ஏவப்பட்டு, செவ்வாய் கிரக வெளிவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது அதன் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும் இதனால் அதன் பட்டரி பாதுகாப்பு வரம்பை மீறி செயலிழந்துவிட்டதோடு அதன் தொடர்பும் துண்டிக்கப்பட்டுவிட்டதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அரியலூர்

## பரோட்டா பிரியர்களுக்கு அடித்த அதிர்ஷ்டம்

அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் அருகே, தனியார் உணவகமொன்று பரோட்டா உண்ணும் போட்டியை நடத்தி வருகின்றது.



குறித்த உணவகத்தில் 10 பரோட்டாக்களை முழுமையாக உட்கொண்டால் அதற்கான தொகையைத் தர வேண்டியதில்லை எனவும், வெற்றி பெற்ற நபருக்கு 100 ரூபாய் பரிசாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த உணவகத்துக்கு ஏராளமானோர் வருகைதந்து ஆர்வத்துடன் குறித்த போட்டியில் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலகாபாத்

## தாஜ்மஹாலை கட்டியது யார்?

### மீண்டும் வெடித்த சர்ச்சை

தாஜ்மஹாலின் உண்மையான வரலாற்றை ஆய்வு செய்ய, உண்மையைக் கண்டறியும் குழுவை அமைக்க வேண்டுமெனத் தெரிவித்து ரஜ்னீஷ் சிங் என்பவர் உச்சநீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில், ‘ஷாஜஹான் தனது மனைவி மும்தாஜுக்காக தாஜ்மஹாலைக் கட்டினார் என்பதை நிரூபிக்க எந்த அறிவியல் ஆதாரமும் இல்லை. எனவே, தாஜ்மஹாலைச் சுற்றியுள்ள சர்ச்சைக்கு முடிவு கொண்டு வரவும், அதன் வரலாற்றைத் தெளிவுபடுத்தவும் வேண்டும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் தாஜ்மஹாலில் உள்ள 22 இரகசிய அறைகளைத் திறக்க வேண்டும் எனவும், தாஜ்மஹாலை வரலாற்று நினைவுச்சின்னமாக அறிவித்ததை எதிர்த்தும், ரஜ்னீஷ் சிங் என்பவர் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்த நிலையில், இவ் வழக்கை விசாரித்த நீதிமன்றம், இவ் விவகாரத்தில் நீதித்துறை கருத்துத் தெரிவிக்க முடியாது எனக் கூறி மனுவைத் தள்ளுபடி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘கியூட்’ வதந்தி





தமிழில் சுல்தான் படத்தில் கார்த்தி ஜோடியாக அறிமுகமான ராஷ்மிகா மந்தனா தற்போது விஜய்யுடன் தமிழ், தெலுங்கு மொழிகளில் தயாராகும் வாரிசு படத்தில் நடித்து வருகிறார்.

தெலுங்கில் கடந்தாண்டு வெளியான புஷ்பா படத்திற்கு பிறகு பாலிவுட்டிலும் பிசியான நடிகையாகி உள்ளார். தற்போது அமிதாப்பச்சனுடன் ‘குட் டே’, ரன்பீர் கபூருடன் ‘அனிமல்’, தெலுங்கில் அல்லு அர்ஜுன் நடிப்பில் ‘புஷ்பா -2’ படங்களில் நடித்து வருகிறார்.

இவர் நடித்த முதல் தெலுங்கு திரைப்படமான ‘கீதாகோவிந்தம்’ மிகப்பெரிய வெற்றி பெற்றது. இதில் கதாநாயகனாக நடித்த விஜய் தேவரகொண்டா உடன் மீண்டும் ‘டியர் காம்ரேட்’ படத்தில் இணைந்து நடித்தார் ராஷ்மிகா.

அப்போது இருந்து இருவரும் காதலிப்பதாக செய்தி வெளியாகி வந்தது. ஆனால் அதற்கு இருவரும் மறுத்து வந்தனர். இந்நிலையில் விஜய் தேவரகொண்டா உடனான காதல் வதந்தி குறித்த கேள்விக்கு ராஷ்மிகா பதில் அளித்தபோது “இது ஒரு கியூட் வதந்தி” என்று கூறியுள்ளார்.



## பொன்னியின் செல்வனின் வசூல் மழை

பிரபல இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில், லைகா நிறுவனத்தின் சுபாஷ்கரன் தயாரிப்பில் உருவான ‘பொன்னியின் செல்வன்’ திரைப்படம் கடந்த 30ஆம் திகதி வெளியாகி உலகம் முழுவதும் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

பொன்னியின் செல்வன் நாவலை படித்த அனைவருமே கிட்டத்தட்ட இந்தப் படத்தை பார்க்க திரையரங்குகளில் குவிந்து வருவதால் இந்தப் படத்தின் வசூல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

‘பொன்னியின் செல்வன்’ திரைப்படம் வெளியான முதல் நாளில் 80 கோடி ரூபாய் வசூல் செய்ததாக ஏற்கெனவே அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாள்களில் இந்தத் திரைப்படம் சுமார் 220 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை விடுமுறைகள் தொடங்குவதால் இந்தத் திரைப்படம் இதுவரை தமிழ் சினிமா செய்யாத வசூல் சாதனையை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

‘பொன்னியின் செல்வன்’ திரைப்படத்தின் இரண்டு பாகங்களின் பட்ஜெட் ரூ 500 கோடி என்று கூறப்பட்ட நிலையில் முதல்பாகமே 500 கோடியை வசூலித்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பூஜா ஹெக்டே மறுப்பு

விஜய்யுடன் பீஸ்ட் படத்தில் நடித்த பூஜா ஹெக்டே விரைவில் வெளிநாடு சென்று அழகு சத்திரச்சிகிச்சை செய்து கொள்ளப் போவதாக சமூக ஊடகங்களில் ஒரு செய்தி வைரலானது. இந்த நிலையில் தற்போது அந்த செய்திக்கு மறுப்பு தெரிவித்து ஒரு தகவல் வெளியிட்டுள்ளார் பூஜா ஹெக்டே.



அவர் கூறுகையில், அண்மைகாலமாக முன்னணி நடிகர்- நடிகைகள் குறித்த ஆதாரமற்ற வதந்திகள் பரவி வருகிறது. அழகு சத்திரச்சிகிச்சை செய்ய வெளிநாட்டிற்கு நான் செல்லப்போவதாக ஒரு வதந்தி வைரலாகி வருகிறது. தற்போது நான் ஐதராபாத்தில் இருக்கிறேன்.

ஒரு மாத விடுமுறையில் வெளிநாடு சென்று விட்டு திரும்பி வந்து அடுத்தபடியாக திரி விக்ரம் இயக்கத்தில் மகேஷ் பாபுவுடன் இணைந்து நடிப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறேன்.

மற்றபடி எனது உடம்பில் எந்த பகுதியிலும் அறுவை சிகிச்சை செய்யவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. அதனால் இதுபோன்ற வதந்திகளை எனது அபிமானிகள் யாரும் நம்ப வேண்டாம் என்று தெரிவித்திருக்கிறார் பூஜா ஹெக்டே.

## அசத்தும் ரம்யா



பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு பிரபலமாகிவிட்ட ரம்யா பாண்டியன் சமூக ஊடகங்களில் தொடர்ந்து போட்டோ சூட் நடத்தி தனது கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு வருகின்றார்.

சில தினங்களுக்கு முன்பு எடுத்துக்கொண்ட சில கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து தற்போது பாவாடை தாவணியில் மங்களகரமாக ஒரு போட்டோ சூட் நடத்தி அது குறித்த புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்பு வெளியிட்ட புகைப்படங்களை விட இந்த பாவாடை தாவணி புகைப்படங்களுக்கு ரசிகர்கள் லைக்குகளை குவித்து வருகிறார்கள்.

## எட்டு ஆண்டுகளுக்கு பின்னர் கர்ப்பம்

விஜய் டிவியில் ஒளிபரப்பான ‘சரவணன் மீனாட்சி’ என்ற தொடர் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இந்த சீரியலில் செந்தில் மற்றும் ஸ்ரீஜா ஆகிய இருவரும் ஜோடியாக நடித்தனர். இந்த ஜோடி நிஜ வாழ்க்கையிலும் திருமணம் செய்து தம்பதிகள் ஆனார்கள்.

திருமணத்திற்கு பின்னரும் இருவரும் ஜோடியாக ஒரு சில தொடர்களில் நடித்து வந்த நிலையில் தற்போது தனது மனைவி கர்ப்பமாக இருப்பதாக மிர்ச்சி செந்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நாங்கள் விரைவில் பெற்றோராக போகிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை



உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி என்று செந்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஸ்ரீஜாவின் சீமந்த புகைப்படத்தையும் பதிவு செய்துள்ள நிலையில் இந்த புகைப்படத்திற்கு ஏராளமான லைக்ஸ் குவிந்து வருகிறது.

**“ ‘சரவணன் மீனாட்சி’ சீரியலில் செந்தில் – ஸ்ரீஜா இருவரும் ஜோடியாக நடித்தனர். இந்த ஜோடி நிஜ வாழ்க்கையிலும் திருமணம் செய்து தம்பதிகள் ஆனார்கள். தற்போது தனது மனைவி கர்ப்பமாக இருப்பதாக மிர்ச்சி செந்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்**

திருமணமாகி எட்டு ஆண்டுகள் கழித்து ஸ்ரீஜா கர்ப்பமாகியுள்ளதை அடுத்து விஜய் டியின் பிரபலங்கள் இந்த பதிவில் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# தென்னாபிரிக்காவை மீண்டும் வென்ற இந்தியா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்ற இந்தியா, கௌஹாத்தியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போட்டியில் வென்றதன் மூலம் இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா, இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்திருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, லோகேஷ் ராகுலின் 57 (28), றோஹித் ஷர்மாவின் 43 (37), விராட் கோலியின் ஆட்டமிழக்காத 49 (28), சூரியகுமார் யாதவ்வின் 61 (22), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 17 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கேஷவ் மஹராஜ் 4-0-23-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 238 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஆரம்பத்திலேயே பவுமா, றீலீ றொஸோவை அர்ஷ்டீப் சிங்கிடம் இழந்தது. சிறிது நேரத்தில் ஏய்டன் மார்க்ரமையும் 33 (19) ஓட்டங்களோடு அக்ஸர் பட்டேலிடம் இழந்தது.

இதைத் தொடர்ந்து வந்த டேவிட் மில்லர் ஆட்டமிழக்காமல் 106 (47), குயின்டன் டி கொக் ஆட்டமிழக்காமல் 69 (48) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களையே பெற்ற தென்னாபிரிக்கா 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், தீபக் சஹர் 4-1-24-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.





## இங்கிலாந்து பிறிமியர் லீக்:

# யுனைட்டெட்டை வீழ்த்திய சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 6-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக, பில் பொடென், எர்லிங்க் பிறோட் ஹலான்ட் ஆகியோர் தலா மூன்று கோல்களைப் பெற்றனர். யுனைட்டெட் சார்பாக அந்தோனி மார்ஷியல் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, அந்தோனி ஒரு கோலைப் பெற்றார்.

## நுவரெலியா விளையாட்டுக் கழகத்தில்

# திறந்தவெளி பூப்பந்தாட்டம் ஆரம்பித்து வைப்பு



எஸ்.கே. குமார்

அகில இலங்கையில் இலங்கை பூப்பந்தாட்ட சம்மேளனம் புதிதாக அறிமுகம்படுத்தி வரும் திறந்தவெளி பூப்பந்தாட்டத்தை, நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் 100 வருட பூர்த்தியை முன்னிட்டு நுவரெலியா விளையாட்டுக் கழக மைதானத்தில் நுவரெலியா பூப்பந்தாட்ட சங்கத்தினர் ஆரம்பித்து வைத்ததனர்.

## பாகிஸ்தானுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

ஏழு போட்டிகள் கொண்ட இத்தொடரில், லாகூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஏழாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 4-3 என தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

இங்கிலாந்து: 209/3 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டேவிட் மலன் ஆ.இ 78 (47), ஹரி ப்ரூக் 46 (29), பென் டக்கெட் 30 (19), பில் ஸோல்ட் 20 (12), அலெக்ஸ் ஹேல்ஸ் 18 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஹஸ்னைன் 1/32 [4])

பாகிஸ்தான்: 142/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷண் மசூட் 56 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 3/26 [4], டேவிட் வில்லி 2/22 [4], அடில் ரஷீட் 1/25 [4], றீஸ் டொப்லி 1/34 [4], மொயின் அலி 0/5 [1])

போட்டியின் நாயகன்: டேவிட் மலன்

தொடரின் நாயகன்: ஹரி ப்ரூக்




## ஸ்பானிய லா லிகா தொடர்:

# சமநிலையில் றியல் மட்றிட் ஒஸஸூனா போட்டி



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற ஒஸஸூனாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் சமப்படுத்தியிருந்தது.

மட்றிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை வின்ஷியஸ் ஜூனியர் பெற்றதோடு, ஒஸஸூனா சார்பாகப் பெற்ற கோலை கிகே கர்சியா பெற்றிருந்தார்.

ரஷ்யா

# போரை நிறுத்தவும்

## புட்டினிடம் போப் கோரிக்கை



உக்ரேன் மீதான போரை முடிவிற்குக் கொண்டு வருமாறு ரஷ்ய ஜனாதிபதி விளார்டிமிர் புட்டினுக்கு போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் முதல் உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. அதே சமயம் உக்ரேனும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இப்போரில் இருதரப்பில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் உரையாற்றிய போப் ,'உக்ரேனில் நிகழும் வன்முறை மற்றும் மரணச்சூழலை நிறுத்த வேண்டும்' எனப் புடினை கேட்டுக் கொண்டார்.

அத்துடன் அமைதியை ஏற்படுத்த உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி, திறந்த மனதுடன் சமாதானத்திற்கு முயற்சிக்க வேண்டும் எனவும், இப் போரை முடிவிற்கு கொண்டு வர சர்வதேச நாடுகள் அனைத்து முன் முயற்சிகளையும் எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா





# உலக சாதனை படைத்த பூனை அமெரிக்காவில், சவன்னா இனத்தைச்

சேர்ந்த ஃபென்ரிர்(Fenrir ) என்ற பூனை உலகின் மிக உயரமான வீட்டுப் பூனை என்ற கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளது.

வில்லியம் ஜோன் பவர் ( William John Powrs) என்பவருக்குச் சொந்தமான குறித்த பூனையானது, சுமார் 18.83 அங்குல உயரம் கொண்டது எனவும், இது ஒரு ஆப்பிரிக்க பூனை மற்றும் வீட்டுப் பூனையின் இனச்சேர்க்கையால் பிறந்த கலப்பினம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பிரித்தானியா

# ஓட்சிசன் சிலிண்டருடன் மரதன்

பிரித்தானியாவைச் சேர்ந்த டிவன் ஹலாய்க்கு (Diven Halai) என்பவர் ஒட்சிசன் சிலிண்டருடன் மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட முதல் மனிதர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

37 வயதான டிவனுக்கு கடந்த 2020-ஆம் ஆண்டு இடைநிலை நுரையீரல் நோய் (IDL) இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் சுவாசிப்பது மற்றும் இரத்த ஓட்டத்தில் ஒட்சிசனைப் பெறுவது கடினமான விடயம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.




இதனையடுத்து கடந்த ஒகஸ்ட் மாதம் 2021-ஆம் ஆண்டு அவர் எங்கு சென்றாலும் எடுத்துச்

பாகிஸ்தான்

# மனைவிகளின் முன்னிலையில் 5 ஆவது திருமணம்

ரோமியோவுக்கு 40 பேரக்குழந்தைகள்

பாகிஸ்தானைச் சேர்ந்த சௌகத் என்பவர் தனது 4 மனைவிகளின் சம்மதத்துடனும் 5 ஆவது திருமணம் செய்து கொண்ட சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சௌகத்தின் 5ஆவது திருமணத்திற்கு முன்னர் அவரது எட்டு மகள்களுக்கும், 1 மகனுக்கும் திருமணமாகியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 67 வயதான சௌகத்துக்கு தற்போது, 10 குழந்தைகள், 40 பேரக்குழந்தைகள் உள்ளனர் எனவும் ,அவரது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 62 ஆக உள்ளது எனவும், அவர் அனைவரும் ஒரே வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா



# வெள்ளை மாளிகை முன்பு ஈரானியர்கள் ஆர்ப்பாட்டம்

ஈரானில் நடைபெறும் அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக, அமெரிக்காவில் வசிக்கும் ஈரானியர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி வெள்ளை மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

22 வயதான மஹ்சா அமினியின் மரணத்தைத் தொடர்ந்து ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டங்கள் வலுத்துள்ளன.

இந்நிலையில், நேற்று முன்தினம் வெள்ளை மாளிகை முன்பு திரண்ட ஈரானியர்கள், ஈரான் கொடிகளை ஏந்தியவாறு பேரணியாகச் சென்றனர்.

அதேசமயம் லண்டன், ரோம், மாட்ரிட் மற்றும் பிற மேற்கத்திய நகரங்களிலும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுவீடன்

# மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு

உலகின் மிக உயர்ந்த பரிசாகக் கருதப்படும் நோபல் பரிசானது ஒவ்வொரு ஆண்டும் அமைதி, இலக்கியம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம் மற்றும் மருத்துவ துறைகளில் தலை சிறந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் 2022 ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு நேற்றைய தினம் சுவீடனைச் சேர்ந்த ஸ்வாண்டே பாபோவிற்கு (Svante Paabo ) அறிவிக்கப்பட்டுள்ளது.

`அழிந்துபோன ஹோமினின்களின் மரபணுக்கள் மற்றும் மனித பரிணாமம் பற்றிய அவரது கண்டுபிடிப்புகளுக்காகவே` அவருக்கு இப்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று (04) இயற்பியலுக்கான விருதும்,5,6,7,10 ஆம் திகதிகளில் வேதியியல் ,இலக்கியம், அமைதி,பொருளாதாரம் ஆகியவற்றுக்கான விருதுகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 04 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.